# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 - ம் நாள் புதன்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள். 01.04.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**24)** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் (COVID-19) நோய் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்,திருப்பத்தூர் அவர்களின் நேரடி உத்தரவுபடி, திருப்பத்தூர் நகராட்சி 36 வார்டுகளிலும் கொரனோ வைரஸ் நோய் தொற்று கண்டறியும் பணி போர்க்கால அடிப்படையில் மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், ஆரம்ப சுகாதாரப்பணியாளர்கள்,நகராட்சி டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் மற்றும் சுற்றுப்புற கிராமம் மற்றும் இந்நகராட்சி பகுதியில் உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் தினசரி வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு சளி,காய்ச்சல் மற்றும் இருமல் பாதிப்பு உள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி களப்பணியில் ஈடுபட்ட அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 600 நபர்களுக்கு காலை சிற்றுண்டி,குடிநீர் பாட்டில்கள் மற்றும் முற்பகலில் பிஸ்கட் , குடிநீர் பாட்டில்கள்ஆகியவற்றை சப்ளை செய்யவும், அவற்றை நகராட்சி பகுதிகளில் கொண்டு சென்று சேர்க்க இலகுரக வாகனம் வாடகைக்கு அமர்த்தி கொள்ளவும் மற்றும் பள்ளி வாகனங்கள் மூலமாக மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், ஆரம்ப சுகாதாரப்பணியளர்கள், நகராட்சி டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் மற்றும் சுற்றுப்புற கிராமம் மற்றும் இந்நகராட்சி பகுதியில் உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோரை இருப்பிடத்திலிருந்து அழைத்து வந்து களப்பணி இடங்களில் இட்டு வர பள்ளி வாகனங்களுக்கான எரிபொருள் நிரப்பவும் ஆகியற்றுக்கான தோராயச் செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி எதிர்நோக்கி உள்ள விடுவிக்கப்படவுள்ள மாநில பேரிடர் பொறுப்பு நிதி (SDRF-COVID19)–யிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் பணியாட்களுக்கு உணவு வழங்க உள்ளூர் உணவகங்களிலிருந்து விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 - ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள். 07.04.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**25)** திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்,அவர்களின் உத்தரவின்படி, திருப்பத்தூர் நகராட்சி அனைத்து பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை களப்பணி மேற்கொள்ளும் மருத்துவ அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் சிறிய பிஸ்கட் பாக்கெட் & 500ml குடிநீர் பாட்டில் ஆகியவற்றை சப்ளை செய்ய நகர மன்ற தீர்மான எண். நாள்.01.04.2020–ல் அனுமதித்தப்படி விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**I.சிற்றுண்டி சப்ளை செய்வதற்கான விலைப்புள்ளி.**

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | அளவு/எண்ணிக்கை | விலைரூ. |
|---|---|---|---|
| 1. | ஒட்டல் சித்ரா,<br>வாணியம்பாடி மெயின்ரோடு,<br>திருப்பத்தூர். | காலை சிற்றுண்டி 1.க்கு | 30.00 |
| 2. | சிவா கேட்டரீங,<br>பெரியார் நகர்,<br>திருப்பத்தூர். | காலை சிற்றுண்டி 1.க்கு | 35.00 |
| 3. | அப்பு மெஸ்,<br>4/1,காளியம்மன் கோயில் தெரு,<br>திருப்பத்தூர். | காலை சிற்றுண்டி 1.க்கு | 40.00 |

**II.சிறிய பிஸ்கட் பாக்கெட் சப்ளை செய்வதற்கான விலைப்புள்ளி.**

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | அளவு/எண்ணிக்கை | விலைரூ. |
|---|---|---|---|
| 1. | A.G.S. MALL,<br>3/33,சின்னக்குளம் மாரியம்மன் கோயில் தெரு,<br>திருப்பத்தூர். | சிறிய பிஸ்கட் பாக்கெட் 1.க்கு | 4.75 |
| 2. | வடமலை சூப்பர் மார்க்கெட்,<br>10,கிருஷ்ணகிரி ரோடு,<br>திருப்பத்தூர். | சிறிய பிஸ்கட் பாக்கெட் 1.க்கு | 4.85 |
| 3. | ஸ்ரீசரவணா மார்க்கெட்டிங,<br>116/C, கிருஷ்ணகிரி மெயின் ரோடு,<br>திருப்பத்தூர். | சிறிய பிஸ்கட் பாக்கெட் 1.க்கு | 4.90 |

**III. 500ml குடிநீர் பாட்டில் சப்ளை செய்வதற்கான விலைப்புள்ளி.**

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | அளவு/எண்ணிக்கை | விலைரூ. |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | K.K.S PACKAGED DRINKING WATER,<br>76/3C,பெரிய கண்ணாலப்பட்டி .கிராமம்,<br>திருப்பத்தூர். | 500ml குடிநீர் பாட்டில் 1 பெட்டி (24எண்கள்) | 135.00 |
| 2. | சரவணா ஏஜென்சிஸ்,<br>29/ஹ1,வி.சி.எம் தெரு,<br>திருப்பத்தூர். | 500ml குடிநீர் பாட்டில் 1 பெட்டி (24எண்கள்) | 150.00 |
| 3. | ஸ்ரீரேணுகா ஸ்டோர்,<br>கருட சேவை மண்டபம்,<br>TNHB ,திருப்பத்தூர். | 500ml குடிநீர் பாட்டில் 1 பெட்டி (24எண்கள்) | 165.00 |

**அலுவலக குறிப்பு**

அ. இனம் எண்.1 காலை சிற்றுண்டி சப்ளை செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.ஒட்டல் சித்ரா, திருப்பத்தூர் என்பவரது விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

இனம் எண்.2 சிறிய பிஸ்கட் பாக்கெட் சப்ளை செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. A.G.S. MALL,திருப்பத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

இனம் எண்.3 500ml குடிநீர் பாட்டில் சப்ளை செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.K.K.S PACKAGED DRINKING WATER,திருப்பத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ஆ. மேற்காணும் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களுக்கு சப்ளை உத்தரவு வழங்கவும், அதற்கான தொகையை மாநில பேரிடர் பொறுப்பு நிதி (SDRF-COVID19)–யிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

**26)** திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்,அவர்களின் உத்தரவின்படி, திருப்பத்தூர் நகராட்சி அனைத்து பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை களப்பணி மேற்கொள்ளும் மருத்துவ அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் சிறிய பிஸ்கட் பாக்கெட் & 500ml குடிநீர் பாட்டில் ஆகியவற்றை வாடகை வாகனம் மூலம் அந்தந்த வார்டு பகுதிகளுக்கு கொண்டு சென்று சப்ளை செய்ய இலகுரக வாகனத்தினை வாடகைக்கு எடுக்க நகர மன்ற தீர்மான எண். நாள். .04.2020–ல் அனுமதித்தப்படி விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | வாகனத்தின் விவரம் | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.நந்தகுமார்,<br>ஓம் சிவசக்தி MSP,<br>46,வாணியம்பாடி ரோடு,<br>திருப்பத்தூர். | TATA –ACE TN18-Q1923 | 1250.00 |

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு.அனீஸ்,<br>17,தென்றல் நகர்,<br>இரட்டை மலை சீனிவாசன் பேட்டை,<br>திருப்பத்தூர். | TATA –ACE TN23-BZ3421 | 1200.00 |
| 3. | திரு.பைரோஸ்,<br>18/108–C,சி.கே.சி. ரோடு,<br>திருப்பத்தூர். | TATA –ACE TN83-R4268 | 1350.00 |

அலுவலக குறிப்பு

1.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் இலகுரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்த குறைவான விலைப்புள்ளி அளித்த திரு.அனீஸ், என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.அனீஸ்,என்பவரின் இலகுரக வாகனத்தினை வாடகைக்கு அமர்த்தி கொள்ளும் நாட்களுக்கான தொகையினை மாநில பேரிடர் பொறுப்பு நிதி (SDRF-COVID19)–யிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2020/எச்1)

27) திருப்பத்தூர் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு நடத்தப்படும், அம்மா உணவகத்திற்கு இதுநாள் வரையில் உதயம் இண்டேன் கேஸ் ஏஜென்சிஸ் நிறுவனத்திலிருந்து கேஸ் சிலிண்டர்கள் பெறப்பட்டு வந்தன. தற்பொழுது மேற்படி நிறுவனம் சிலிண்டர் சப்ளைக்கு முன்பணம் அல்லது சிலிண்டர் சப்ளை செய்யும்போது பட்டியல் தொகை உடனடியாக வழங்க வலியுறுத்துகின்றனர். இல்லை எனில் சிலிண்டர் வழங்க இயலாது என தெரிவித்து விட்டனர்.

எனவே, அம்மா உணவகம் அத்தியாவசியம் கருதி பொதுமக்களின் பயன்பாட்டினை கருதி மற்றொரு நிறுவனமான பாரத் கேஸ் ஏஜென்சியான ஸ்ரீ ஐஸ்வர்யம் கேஸ் ஏஜென்சியின் நிறுவனத்திற்கு 5 சிலிண்டர் பெற இணைப்பு கட்டணம் ரூ.3500x5=ரூ.17,500/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்
2. உதயம் இண்டன் கேஸ் ஏஜென்சிஸ் நிறுவனத்திற்கு முன்னர் செலுத்திய இணைப்பு கட்டணத்திலிருந்து மேற்படி நிறுவனம் வழங்கிய சிலிண்டர்களுக்கான பட்டியல் தொகை ஈடு செய்துக்கொள்ளலாம்.
3. ஸ்ரீ ஐஸ்வர்யம் பாரத் கேஸ் ஏஜென்சிஸ், 304/29, வாணியம்பாடி ரோடு, பாச்சல், திருப்பத்தூர் தாலுக்கா என்ற நிறுவனத்திற்கு இணைப்பு கட்டணம் செலுத்தி கேஸ் சிலிண்டர்கள் பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

# <u>திருப்பத்தூர் நகராட்சி</u>

2020 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 - ம் நாள் புதன்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் — தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் — திருப்பத்தூர் நகராட்சி.
நாள். 29.04.2020

**28)** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்படி வைரஸ் நோய் நகராட்சி பகுதிகளில் பரவா வண்ணம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதிகளில் கிருமிநாசினி மருந்துகள் தெளிக்கும் பணிகள் இயந்திர வாகனங்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைட் (Sodium Hypo Chlorite) 20,000 லிட்டர் குறைந்த விலையில் சப்ளை செய்ய ஸ்ரீமைதிலி ஏஜென்சீஸ், எண்.18, சின்னகுளம் மாரியம்மன் கோயில் தெரு, திருப்பத்தூர் நிறுவனம் 31.03.2020–ம் தேதியில் கடிதம் அளித்துள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திலிருந்து சோடியம் ஹைப்போ குளோரைட் வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணிகளின் அவசர அவசியம் கருதி பொது மக்கள் உயிர் காக்கும் முக்கியப் பணியாதலால், ஸ்ரீமைதிலி ஏஜென்சீஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் அல்லது மாநில பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.298 / 2020 / எச்1

**29)** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பணிகளுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை பொது சுகாரதார பிரிவு தூய்மை பணியாளர்களுக்கு அளிக்கவும், நகரின் அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி மருந்துகள் தெளிக்கவும் அவசர அவசியம் கருதி திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் லிமிடெட், திருப்பத்தூர் நிறுவனத்திலிருந்து கீழ்காணும் விவரம் பொருட்கள் வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் விவரம் | அளவு/எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துணி முகக்கவசம் | 2000 |
| 2 | அறுவைசிகிச்சை கையுறை | 2000 |
| 3 | பவர் ஸ்பிரேயர் | 5 |
| 4 | லைசால் | 300லி |
| 5 | சோப் ஆயில் | 200லி |
| 6 | பினாயில் | 500லி |
| 7 | கை உறை | 500 |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதி (அ) மாநில பேரிடர் பொறுப்பு நிதிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.298 / 2020 / எச்1.

30) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.1167/2020/அ3 நாள்.08.04.2020-ல் இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் உள்ளவர்கள் பயன்படுத்தப்பட்ட மாஸ்க், கையுறை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை நகராட்சி பணியாளர்கள் மூலம் மஞ்சள் பைகள் கொண்டு அப்புறப்படுத்தி M/s KEN BIO LINKS, SLRS Hospital Road, Kandipedu, Katpadi Taluk, Vellore நிறுவனத்திற்கு அனுப்பவும், மஞ்சள் பைகளை வாங்குவதற்கு M/s MEDISYS INC, எண்.41, அசோக் நகர், சென்னை நிறுவனத்தின் விலைப்பட்டியலை இணைத்து வரப்பெற்றுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, M/s MEDISYS INC, எண்.41, அசோக் நகர், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி, 300 கிலோ மஞ்சள் பைகள் வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி M/s MEDISYS INC, எண்.41, அசோக் நகர், சென்னை நிறுவனத்தில் 300 கிலோ மஞ்சள் பைகளை வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்.**298/2020/எச்1)

**31)** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வைரஸ் தொற்று பரவாத வண்ணம் **36** வார்டுகளிலும் கிருமி நாசினி தெளிக்கும் பணி நடைபெறுவதாலும், தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கவும், அவசர அவசியம் கருதி M/s திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் லிட், திருப்பத்தூர் நிறுவனத்திடமிருந்து கீழ்காணும் விவரப்படி பொருட்களை வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **பொருட்களின் விவரம்** | **அளவு/ எண்ணிக்கை** |
|---|---|---|
| **1** | லைசால் | **300 லி** |
| **2** | சோடியம் ஹைப்போ குளோரைட் | **8880லி** |
| **3** | மாஸ்க் | **4500** |
| **4** | கையுறை | **4500** |
| **5** | முழு உடற்கவசம் | எண்ணிக்கை **500** |
| **6** | பிளிச்சிங் பவுடர் | **1500 கி** |
| **7** | சாணிடைசன் | **90 லி** |

<u>**அலுவலக குறிப்பு:**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதி (அ) மாநில பேரிடர் பொறுப்பு நிதிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**298 / 2020 /** எச்**1.**

**32)** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் தினசரி ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி, கற்பகம் சூப்பர் மார்கெட் மற்ம் அரசு அங்கீரம் பெற்ற நிறுவனங்களில் சப்ளை இல்லாத பட்சத்தில் பொருட்கள் கிடைக்கும் நிறுவனங்களில் வாங்கி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளபடி, பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 5 டன் பிளீச்சிங் பவுடர் உடன் சப்ளை செய்ய கோரிவிலைப்புள்ளி கோரி பிளீச்சிங் பவுடர் வாங்கி பயன்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 5 டன் பிளீச்சிங் பவுடர் வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்**.298/2020/எச்1)

**33)** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்படி வைரஸ் நோய் நகராட்சி பகுதிகளில் பரவாத வண்ணம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதிகளில் கிருமிநாசினி பிளீச்சிங் பவுடர் தெளிக்கும் பணிக்காக அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. பெறப்பட்ட **3** விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.அண்ணாமலையார் ஏஜென்சீஸ்,<br>திருப்பத்தூர் மெயின் ரோடு,<br><u>ஊ</u>. ஆண்டியூர்,<br>ஊத்தங்கரை தாலுக்கா. | (பிளீச்சீங் பவுடர் **36%-1** கிரோடு)<br>**1** கிலோவிற்கு ரூ.**46.00** |
| 2 | விநாயகா ஏஜென்சீஸ்,<br>அண்ணா நகர்,<br>புதுரோடு,<br>சேலம்–**636 001.** | **1** கிலோவிற்கு ரூ.**47.00** |
| 3 | ஸ்ரீ சிவசக்தி கெமிகல்ஸ்,<br>**155/35,**<br>ஆண்டியூர் போஸ்ட்,<br>ஊத்தங்கரை தாலுக்கா. | (பிளீச்சீங் பவுடர்)<br>**1** கிலோவிற்கு ரூ.**48.00** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.அண்ணாமலையார் ஏஜன்சீஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும், 5 டன் பிளீச்சிங் பவுடர் (33% குளோரினேஷன் தரம்) வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளியை ஏற்று சப்ளை உத்திரவு வழங்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.2023 / 2020/ எச்1

**34)** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரில் 36 வார்டுகளில் அனைத்துப் பகுதிகளிலும் Jet Rodding வாகனம் மற்றும் LCV –ல் பொருத்தப்பட்ட மோட்டார் பம்ப் மூலம் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் குறுகலான தெருக்களில் Jet Rodding வாகனம் செல்ல இயலாத இடங்களில் LCV வாகனம் கொண்டு கிருமிநாசினி தெளித்தால் எந்த பகுதியும் விடுபடாமலும், கூடுதல் பகுதிகள் ஒரு நாளைக்கு Disinfection செய்ய இயலும் என்பதால் 2 LCV வாகனத்திற்கு மோட்டார் பம்ப் புதியதாக வாங்கி பொருத்தி கிருமிநாசினி தெளிக்கும் பணிக்கு தோராய செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357 / 2020 / இ1

**35)** திருப்பத்தூர் நகராட்சியில் இரண்டு தட்டச்சர்கள் Outsourcing முறையில் 13.01.2020 முதல் 12.04.2020 தேதி முடிய மூன்று மாத காலத்திற்கு மட்டும் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் நிறுவனம், வாணியம்பாடி அவர்களின் ஒப்பந்தத்தின் மூலமாக பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தற்பொழுது 13.04.2020 முதல் 12.07.2020 வரை மூன்று மாத காலத்திற்கு மீண்டும் நீட்டிப்பு செய்யவும் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர், வேலூர் அவர்களின் விலை விகிதத்தத்தின்படி ஊதியம் வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1397/2018/சி1)

36)	இந்நகராட்சியில் வெங்கடேஷ்வரா நகரில் இருந்து தில்லை வட்டம் CKC தியேட்டர் பின்புறம் செல்லும் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் உத்தரவு கடிதம் ந.க.எண் அ2/190/2020 நாள் 18.03.2020 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண் 0211/2020/இ1

37)	திருப்பத்தூர் நகராட்சியில் SBM-SWM 10th SHPC 2019-2020 திட்டத்தின் கீழ் பா.உ.ச. நகர் குப்பை கிடஙகு பகுதியில் மதிப்பீடு தொகை ரூ.18.00 –ல் RRC No-1 (Construction of Recovery Resource Centre) அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி தாளில் 14.01.2020–ல் விளம்பரம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் தினதந்தி செய்தி தாள் விளம்பர நிறுவனத்தார் விளம்பர கட்டண தொகை ரூ.2520/–ஐ வழஙக கோரப்பட்டதன் அடிப்படையில் பட்டியல் தொகையை Bright advertising அவர்களுக்கு வழஙக ஆணையர் அனுமதிக்கும் மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையை நகராட்சி பொது நிதி 2019–2020–ல் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2273/2019/இ1)

38) திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 36 வார்டுகளிலும் மோட்டார் பம்ப் மூலம் கிருமிநாசினி தெளிப்பதற்கு குறுகலான தெருக்களில் செல்ல வேண்டி LCV வாகனத்தில் மோட்டார் பம்ப் புதியதாக வாங்கி பொருத்த ந.ம.தீ.எண்.34 நாள்.29.04.2020–ல் அனுமதித்தபடி இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண். 357 /2020 / இ1 நாள். .04.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எ. | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி ஏஜென்சீஸ் பழைய இரயில்வே லைன், பாரதியார் ஐ.டி.ஐ ரோடு, தருமபுரி –1 | HTP- பம்பு–30 Module எஞ்சின்<br>Hose -20மீ.<br>Gun HiJet | 1 No<br>2No<br>2 No | 27000 |
| 2 | திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் ஆசிரியர் நகர் திருப்பத்தூர். | HTP- பம்பு –30 Module எஞ்சின்<br>Hose -20மீ.<br>Gun HiJet | 1 No<br>2No<br>2 No | 33500 |
| 3 | ஜெயகுமார் எஞ்சினியரிங் ஒர்க்ஸ் 42–A, சி.கே.சி.ரோடு திருப்பத்தூர் | HTP- பம்பு –30 Module எஞ்சின்<br>Hose -20மீ.<br>Gun HiJet | 1 No<br>2No<br>2 No | 34500 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி ஏஜென்சீஸ், தர்மபுரி நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகை ஒரு எஞ்சின் செட்டிற்கான தொகை ரூ.27,000/–ஐ ஏற்று அன்னாருக்கு 2 எஞ்சின் செட் சப்ளை செய்ய பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2 எண்ணிக்கை எஞ்சின் செட் சப்ளை செய்ய பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 357/ 2020 / இ1

39) கொரோனா நொய் தொற்று காரணமாக தற்பொழுது 144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து உணவகங்களும் மூடப்பட்டு உள்ளன. இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் தினசரி காலை, மதியம் மற்றும் இரவு என மூன்று வேளைகளுக்கும் சுகாதாரமான உணவு தயாரித்து வழங்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படியும் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண்246/2020/எச் நாள் 08.04.2020–ன் படியும் அம்மா உணவகத்தில் பொது மக்களுக்கு உணவுகள் தயாரிக்கும் பொருட்டு அங்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட வேண்டி இப்பணிக்கு உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ. 90,000/– மற்றும் பணியினை செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது நிதி 2020–2021–ம் நிதியாண்டில் இப்பணிக்கான செலவீனத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்0357/2020/இ1

**40)** பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் **2019–2020–ம்** நிதியாண்டின் கீழ் பணிகள் செய்ய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண் அ**2/190/2019** நாள் **27.02.2020** அவர்களின் உத்தரவு கடிதம் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பர கட்டணத் தொகையினை நகராட்சி பொது நிதி **2020–2021** ஆண்டில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்**0066/2020/**இ**1**

41) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5437/ஜே2/2020-15 நாள்.17.04.2020-ல் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வாட்ஸ் அப் செய்தியின்படியும் இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கோள்ளும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி இரண்டு முகவுறை மற்றும் கையுறைகள் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்களுக்கு முகவுறை, கையுறை (ரப்பர் செட்) வழங்கவும், திடக்கழிவுப் பணிகளை மேற்கொண்டு சுகாதார சீர் கேடுகள் ஏற்படாமல் தொற்று நோய் தடுப்பு பணிகளில் பயன்படுத்தி நகரினை தூய்மையாக பராமரித்திட சுண்ணாம்பு தூள் வாங்கிட விலைப்புள்ளி கோரவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **பொருள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | முகவுறை | 5000 |
| 2 | கையுறை (ரப்பர் செட்) | 1000 |
| 3 | சுண்ணாம்பு தூள் | 10,000 |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி முகவுறை, கையுறை (ரப்பர் செட்) மற்றும் சுண்ணாம்பு தூள் ஆகியவை வாங்கி பயன்படுத்தவும் அதற்கான செலவினத்தை நகராட்சி SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்.**298/2020/எச்1)